**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 317/2024**

**Deposition of P.W. 10**

Name : டாக்டர். திரு. ஜெயபாண்டியன்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:11.03.2026

**Accused Present.**

<u>முதல் விசாரணை</u>–

நான் தற்போது ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவு மருத்துவராக பணியாற்றி வருகிறேன். 05.06.2024ம் தேதி இரவு 08.04 மணிக்கு ராஜேந்திரன் ( வயது 34) என்பவர் சிகிச்சைக்காக வந்தார். அவரிடம் நான் கேட்ட போது அவர் 05.06.2024ம் தேதி இரவு 07.30 மணிக்கு மணலிக்கரை சந்தை அருகில் வைத்து தன்னை கத்தியால் ஒருவர் குத்தியதாக என்னிடம் கூறினார். அவரை நான் பரிசோதித்து பார்த்த போது அவருக்கு கீழ் கண்ட காயங்கள் இருந்தன.

1) இடது அடிவயிற்றில் கத்தி குத்து காயம் காணப்பட்டது. அதன் வழியாக குடலின் பாகம் வெளியே தெரிந்தது.

மேல் சிகிச்சைக்காக அவரை சிகப்பு மண்டலத்தில் உள்நோயாளியாக

அனுமதித்தேன். அவருக்கு மேல் சிகிச்சை டாக்டர்.திரு. விவேக் என்பவரால் வழங்கப்பட்டது. அவர் வழங்கிய சிகிச்சை கோப்புகளின் அடிப்படையில் காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கினேன்.காயச்சான்று அ.சா.ஆ.6. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சிகிச்சைக்கு வரும்போது காயம்பட்ட நபர் சுயநினைவுடன் இருந்தார். நான் சொன்ன காயம் ஒரு நபர் ஓடி கட்டுமான பணியில் அமைந்துள்ள இரும்பு பட்டையின் கூர்மையான பகுதியில் விழும் போது ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் இல்லை. காயத்தின் அளவை நான் குறிப்பிடவில்லை. போலீசார் விசாரணையில் டாக்டர். திரு. விவேக் மேல்சிகிச்சை வழங்கியதாக நான் வாக்குமூலம் கொடுக்கவில்லை.